www.nunnarivu.com

நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்

NEETHIYIN NUNNARIVU

மலர் : 7 Volume : 7 | இதழ் : 2 Issue : 2 | நவம்பர் : 2026 November : 2026 | தமிழ் மாத இதழ் Tamil Monthly Mgazine | விலை : ரூ.15/- Price : Rs. 15/-





அடுத்தடுத்து அதிரடி காட்டும் முதல்வர் விஜய்.

சென்னை கமிஷனர் அலுவலகத்தில் பாரபட்சமா? உரிய நடவடிக்கை எடுப்பாரா கமிஷனர் அமல்ராஜ்!





அதிரடி நடவடிக்கைகளுக்கு அடையாளமாக தாம்பரம் போக்குவரத்து காவல் துணை ஆணையர்

Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement



Our Service



Power



Water &Waste water




Metro



SPM



Cement



Metal



Smart World

Our Clients

Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, [redacted]
Nagar, Tambaram
Chennai-
600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
R.சிவக்குமார்

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய்,
G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி. S.P.
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் – குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல் ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.

முதன்மை நிருபர்கள்
R.இன்பசேகரன், R.சதீஷ்குமார்,
V.மாதவன், A.ராஜ்மோகன்,

நிருபர்கள்
G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சஞ்சய்குமார்,
A.மதிமாறன், மு.ஜசக், கணேசன்,
P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்,
தங்கபாண்டியன், ராமமூர்த்தி

சட்ட ஆலோசகர்கள்
R.வீரராகவன்.BSc., M.B.M., LL.B.,
K.M.S.செந்தில்குமார்.BSc., B.L.,
S.சரவணன்.M.Sc., B.L.,M.A.,

வடிவமைப்பு : மகாராஜா பிரிண்டர்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை – 42.
E-mail: nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

ஆசிரியர் பக்கம்

அன்பெனும் நீர் ஊற்ற...

மனிதனுக்கு மனிதன் அன்பு காட்டுவது குறைந்து, மனிதனை மனிதனே அழித்து வாழும் சமுதாயமாக நம் மனித இனம் மாறிக் கொண்டு இருக்கிறது. பணம், புகழ், போதை, மண் மீது மோகம் கொண்ட சமுதாயமாக மாறிக்கொண்டு போகிறது நம் சமுதாயம்... நிலையில்லாதவற்றின் மீது கொண்ட மோகம் ஏன் நிலையான அன்பின் மீது வைக்க நம்மால் முடியவில்லை.? கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சாதிச்சண்டை மதச்சண்டை, அரசியல் சண்டை இவையெல்லாம் இல்லாமல் நம்மால் இருக்க முடியாதா? அண்ணல் காந்தி பிறந்த மண்ணில் அகிம்சை இன்று இல்லை. அன்னை தெரசா வாழ்ந்த இந்த மண்ணில் இன்று இரக்கம் அழிந்து வருகிறது. புத்தன் பிறந்த மண்ணில் இன்று அன்பு குறைந்து வருகிறது. அடிபட்டு கிடக்கும் ஒருவனை வேடிக்கை பார்க்கிறோம் அல்லது அதை படம்பிடித்து சோஷியல் மீடியாவில் டிரென்ட் ஆக்குகிறோமே தவிர அவனைக் காப்பாற்ற யாரும் முயற்சி எடுப்பதில்லை. நம்மிடம் தோன்றும் பாசமும், அன்பும், இரக்க குணமும் இன்று தேய்ந்து கரைந்து கொண்டு இருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுவதை விடுத்து மண்ணுக்காகவும், பொருளுக்காகவும், சண்டை இடுகிறோம். எதற்காக வாழ்கிறோம் என்றே தெரியாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.இதையெல்லாம் விட, அன்பிற்காக வாழ மறந்து விட்டோம். நம்மிடம் தோன்றும் பாசமும், அன்பும், இரக்க குணமும் இன்று தேய்ந்து கரைந்து கொண்டு இருக்கிறது. குழந்தைகளிடம் கூட அன்பிற்கான அர்த்தம் மறைந்து போகும் நிலையை நாம் உருவாக்கி விட்டோம். அது நீடித்தால் அன்பு என்ற வார்த்தை மறந்து போய் எதிர்காலத்தில் அதனை ஏட்டில் மட்டுமே படிக்கும் நிலைமை உருவாகக்கூடும். எனவே.,மனித நேயம் வளர, அன்பெனும் நீர் ஊற்ற நாம் முயலவேண்டும். அன்பு காட்டுங்கள். அடுத்தவரிடம் அன்பாயிருப்பது உண்மையில் உங்களுக்கே நன்மை பயக்கும். உங்களை உயர் நிலைக்கு எடுத்து கொண்டு போய் சேர்க்கும்.



ஆசிரியர்
R.சிவக்குமார்

சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் குறிப்பிட்ட பத்திரிகையாளர்களுக்கு மட்டும் அனுமதி ஏன்?

சென்னை கமிஷனர் அலுவலகத்தில் பாரபட்சமா? உரிய நடவடிக்கை எடுப்பாரா கமிஷனர் அமல்ராஜ்!



ஜனநாயகத்தின் நான்காவது தூணாகப் போற்றப்படுவது பத்திரிகைத்துறை. மக்களின் பிரச்சினைகளையும், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளையும், காவல்துறையின் நடவடிக்கைகளையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பத்திரிகையாளர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.



ஆனால், சென்னையில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்குவதில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுவதாகப் ஸி160 பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஒரு சில பத்திரிகையாளர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படுகிறதே? ஏன் என்றும் மற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிக்க வரும்போது அவர்களுக்கு ஏன் அனுமதி மறுக்கப்படுகிறது? என்பதுதான் தற்போது பலரின் கேள்வியாக உள்ளது.

பத்திரிகை என்பது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கோ, ஒரு சில நபர்களுக்கோ மட்டும் சொந்தமானதல்ல. அச்சு ஊடகம், தொலைக்காட்சி, இணையதளம், மாத இதழ், வார இதழ் எனப் பல்வேறு தளங்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களும் செய்தி சேகரிக்கும் உரிமையும், தங்களது தொழிலைச் செய்வதற்கான வாய்ப்பும் பெற வேண்டும்.

நிச்சயமாக, காவல் ஆணையர் அலுவலகம் என்பது பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த அரசு அலுவலகம். எனவே பாதுகாப்பு நடைமுறைகள், அடையாள அட்டை சரிபார்ப்பு, முன் அனுமதி, சந்திப்பு நேரம் போன்ற கட்டுப்பாடுகள் இருப்பதில் தவறில்லை. ஆனால் அந்த நடைமுறைகள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டாமா?

ஒரு குறிப்பிட்ட பத்திரிகையாளர் சென்றால் அனுமதி, மற்றொரு பத்திரிகையாளர் சென்றால் அனுமதி இல்லை என்ற நிலை இருப்பதாகக் கூறப்படும் புகார்கள் உண்மையெனில், அதற்கான காரணத்தை வெளிப்படையாக விளக்க வேண்டிய பொறுப்பு காவல்துறை

நிர்வாகத்திற்கு உள்ளது.

பத்திரிகையாளர்களிடையே பாகுபாடு இருக்கக்கூடாது. எந்தப் பத்திரிகை பெரியது, எது சிறியது என்ற அடிப்படையில் செய்தி சேகரிக்கும் வாய்ப்பு தீர்மானிக்கப்படக்கூடாது. அதே நேரத்தில் பாதுகாப்பு விதிமுறைகளையும் அனைவரும் மதிக்க வேண்டும்.

சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுக்கான அனுமதி நடைமுறை என்ன? அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு என்னென்ன விதிமுறை கள் உள்ளன? செய்தி சேகரிக்க வரும் அனைத்து ஊடகப் பிரதிநிதிகளுக்கும் ஒரே மாதிரியான நடைமுறை பின்பற்றப்படுகிறதா?

இந்தக் கேள்விகளுக்கு சென்னை காவல் ஆணையர் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்பதே பல பத்திரிகையாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அதாவது கமிஷனர் ஆபீஸ் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு என ஒரு தனி அறை உள்ளது. புகார் கொடுக்க வரும் நபர்கள் அந்த இடத்திற்கு வந்து புகார் காப்பியை அங்குள்ள பத்திரிகையாளர்களிடம் வழங்குவதும் அங்குள்ள தொலைக்காட்சிகளுக்கு பேட்டி கொடுப்பதும் வழக்கமான ஒரு விஷயமாகும் கமிஷனர் அலுவலகத்துக்கு வரும் பத்திரிகையாளர்கள் பெரும்பாலும் பத்திரிகையாளர் அறையிலேயே இருப்பதும் வழக்கம், இதுதான் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த விஷயம் ஒரு சில பத்திரிகையாளர்கள் கமிஷனர் அலுவலகத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் சென்று அதிகாரிகளை சந்தித்து வேறு ஏதும் செய்திகள் புதிதாக உள்ளதா என கேட்பதும் வழக்கத்தில் உள்ள நடைமுறைதான், இந்த நிலையில்தான் சென்னை பேப்பரில் உள்ள கமிஷனர் அலுவலகத்தில் திடீரென ஒரு கட்டுப்பாடு கொண்டு வருகிறார்கள் அதாவது கமிஷனர் அலுவலகத்தில் உள்ள முக்கியமான தொலைக்காட்சிகள் முக்கியமான நாளிதழ்களை சார்ந்த நிருபர்களுக்கு மட்டும் ஒரு அடையாள அட்டையை வழங்கு கிறார்கள் இந்த அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே கமிஷனர் அலுவலகத்துக்குள் எங்கு வேண்டுமானாலும் போகலாம் வரலாம் என ஒரு எழுதப்படாத ஒரு சட்டத்தை அங்கு அமுல் படுத்தி உள்ளனர். பத்திரிக்கையாளன் என்பவன் அவன் எங்கு வேண்டுமானாலும் சென்று செய்திகளை எடுக்கலாம் என்பது அனைவரும் அறிந்ததே ஒரு சில மூத்த பத்திரிகையாளர் என்ற போர்வையில் வலம் வரும் கட்டிங் பார்ட்டிகள் கமிஷனர் ஆபீசிலிருந்து கல்லா கட்டுவதை இங்கு வரும் பத்திரிகையாளர்கள் அறிந்து வெளியில் சொல்லி விடுவார்கள் என்ற பயத்தில் அவர்களுக்கு வேண்டப்பட்ட அதிகாரிகளிடம் இல்லாததும் பொல்லாததை சொல்லி இது போன்ற ஒரு அடையாள அட்டை வழங்க சொல்லியும் சிலருக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது நாம் விசாரித்த வகையில் வெளிவந்த செய்தி இது தான்,நாங்கள் கேட்பது ஒன்றே ஒன்று தான் இன்றைய பத்திரிக்கையாளன் நாளைய மூத்த பத்திரிகையாளர் ஆவார்,

மூத்த பத்திரிகையாளர்கள் இன்றைய இளைய தலைமுறையினரை வழிநடத்து செல்ல வேண்டுமே தவிர சில போலீஸ் அதிகாரிகளுக்கு ஜால்ராவாக இருக்கக் கூடாது என்பது பல பத்திரிகையாளர்கள் கேள்வியாக உள்ளது அதே நேரத்தில் இது போன்ற கட்டுப்பாட்டை தளர்த்தி விட்டு மீண்டும் சென்னை வேப்பேரி கமிஷனர் அலுவலகத்திற்கு அனைத்து பத்திரிகையாளர்களும் வந்து செல்ல உத்தரவிட வேண்டும் அல்லது அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் அதே போன்ற அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பதுதான் அனைவரின் கோரிக்கையாக உள்ளது இதை தற்போது நியாயத்திற்கும் நேர்மைக்கும் பெயர் போன போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் பத்திரிகையாளர்களின் இந்த கோரிக்கையை ஏற்று செயல்படுத்துவாரா 6160வீ பெருத்து இருந்து பார்ப்போம்

பத்திரிகையாளர்கள் கேட்பது சலுகை அல்ல சமமான நடைமுறையும், வெளிப்படைத்தன்மையும் மட்டுமே! பாதுகாப்பு விதிமுறைகள் அவசியம். அதேபோல் பத்திரிகைத் துறையின் தொழில்முறை மரியாதையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் கதவுகள் திறக்கப்படுகின்றன என்ற சந்தேகம் எழாமல், அனைத்து ஊடகங்களுக்கும் பொதுவான, தெளிவான அனுமதி நடைமுறையை சென்னை காவல்துறை உருவாக்க வேண்டும்.

கேள்வி கேட்பது பத்திரிகையாளர்களின் கடமை, கேள்விகளுக்குப் பதிலளிப்பது நிர்வாகத்தின் பொறுப்பு!

பேரிடர் கால மீட்புப் பணிகளுக்கு புதிய வாகனங்கள் அறிமுகம்!





ஹோண்டா இந்தியா பவுண்டேஷன் (HIF) சார்பில், சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல்துறையின் அவசரகால மீட்புப் பணிகளுக்காக 50 ஹோண்டா இருசக்கர வாகனங்கள் மற்றும் ஒரு கார் வழங்கப்பட்டன.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் டாக்டர் கி. அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையின் அவசர கால உதவி பணிகள் (ERV- Emergency Response Vehicle) பாட்டிற்காக வழங்கி, அவற்றின் இயக்கத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

விரைவான அவசரகால உதவி, மேம்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு!



சீர்காழி புதிய பேருந்து நிலையத்தில் ஆதரவற்ற நிலையில் இருந்த முதியவரை, சமூக நலத்துறையினர் மற்றும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையினர் மீட்டு, செம்மங்குடி ஆலயம் முதியோர் இல்லத்தில் பாதுகாப்பாக ஒப்படைத்தனர். சிங்கப்பெண் உதவி எண்.1091



விவசாயிகள் கவனத்திற்கு!

பயிர்க் காப்பீடு செய்ய நவம்பர் 16 கடைசி நாள்

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா, தாளடி பருவ நெற்பயிர்களுக்கு பதிவு செய்ய நவம்பர் 16 ஆம் தேதி கடைசி நாள் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் ரேவதி தெரிவித்துள்ளார். இதற்காக விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.583.50 காப்பீட்டுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்றும், இதுவரை தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,05,339 ஏக்கர் பரப்பளவில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது

விவசாய அடையாள எண் பதிவு செய்யாதவர்கள் நிலத்தின் கணினி சிட்டா, ஆதார் அட்டை மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண்ணுடன் அருகிலுள்ள பொது சேவை மையம் அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகிப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அறிவிப்பு





சீர்காழியில் அரசு பேருந்தில் சரக்கு கடத்தல்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ் ஸ்டாண்டிற்கு காரைக்காலில் இருந்து வந்த அரசு பேருந்தில் இருந்து சந்தேகத்திற்கு இடமான வகையில் இறங்கிய 3 பெண்களிடம் போலீசார் சோதனை நடத்தினர். அப்போது அவர்களிடம் இருந்து கட்டை பையில் புதுச்சேரி மாநில மது பாட்டிகள் இருந்தது தெரியவந்தது. மூவரையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் இருந்த 400 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர். இதேபோல் பைக்கில் காரைக்கால் சாராயம் கடத்தி வந்த 2 சகோதரர்களையும் கைது செய்தனர்.





எஸ் கே பாரதி

தீபாவளி அடாவடி வசூலில் ஆம்னி பேருந்துகள், அச்சத்தில் பயணிகள்



பல ஆண்டுகளாக தொடரும் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்குமா போக்குவரத்து துறை? முற்றுப்புள்ளி வைக்குமா முதல்வர் விஜய் அரசு?

பண்டிகை காலங்களில் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையுடன் காத்திருக்கும் பொதுமக்களுக்கு, தனியார் ஆம்னி பேருந்துகளின் கட்டண உயர்வு மிகப்பெரிய சுமையாக மாறி வருகிறது. சேவை செய்ய வேண்டிய போக்குவரத்துத் துறை, சில தனியார் பேருந்து நிறுவனங்களின் பேராசைக்கு வழி விடுகிறதா என்ற கேள்வி இன்று பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது

பொங்கல், தீபாவளி, ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை, கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் தொடர் விடுமுறை நாட்கள் வந்துவிட்டாலே சென்னையில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்குச் செல்லத் தயாராகிறார்கள். குடும்பத்தினருடன் பண்டிகையைக் கொண்டாட வேண்டும், பெற்றோர்களைப் பார்க்க வேண்டும், உறவினர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசையில் முன்கூட்டியே பயணத்தைத் திட்டமிடுகிறார்கள். ஆனால், அந்த மகிழ்ச்சியான பயணத்திற்குப் பெரும் தடையாக நிற்பது தனியார் ஆம்னி பேருந்துகளின் தாறுமாறான கட்டண உயர்வுதான். சாதாரண நாட்களில் ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் வசூலிக்கப்படும் கட்டணம், பண்டிகைக் காலங்களில் ஸி160 மடங்கு உயர்த்தப்படுவதாகப் பயணிகள் தொடர்ந்து புகார் தெரிவிக்கின்றனர்

பண்டிகைக் காலங்களில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவது வரவேற்கத்தக்கது. ஆனால், அனைத்து வழித்தடங்களிலும் பயணிகளின் தேவைக்கு ஏற்ப போதுமான பேருந்துகள் கிடைக்கிறதா என்பது முக்கியமானகேள்வி

கேள்வி

பண்டிகைக் காலங்களில் அதிகக் கட்டணம் வசூலிப்பதாகப் புகார்கள் எழும்போதெல்லாம் அதிகாரிகள் சோதனை நடத்துவது, அபராதம் விதிப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகின்றன. ஆனால், இந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக மட்டுமே இருக்கக்கூடாது. அனைத்து ஆம்னி பேருந்துகளின் கட்டண விவரங்களையும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட கட்டண விதிமுறைகள் மீறப்படுகிறதா என்பதைத் கண்காணிக்க வேண்டும். தொடர்ந்து அதிகக் கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இணையதள முன்பதிவு நிறுவனங்கள் வாயிலாக வசூலிக்கப்படும் கூடுதல் கட்டணங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு புகார் அளிக்க எளிய வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

விதிமீறல்களில் ஈடுபடும் நிறுவனங்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டண விவரங்கள், வரி, முன்பதிவுக் கட்டணம் போன்றவை பயணிகளுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

அதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்டால் பயணிகள் எவ்வாறு புகார் அளிப்பது, அவர்களுடைய பணத்தை எவ்வாறு திரும்பப் பெறுவது என்பதற்கான தெளிவான வழிகாட்டுதல்களையும் அரசு வழங்க வேண்டும்.

பண்டிகை என்பது பணக்காரர்களுக்கு மட்டுமா? ஏழை, நடுத்தர மக்களுக்கு பண்டிகையைக் கொண்டாட உரிமை இல்லையா? சொந்த ஊருக்குச் சென்று பெற்றோர்களுடன் ஒரு நாள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற ஆசைக்குக்கூட ஆயிரக்கணக்கில் பணம் செலவழிக்க வேண்டுமா?

பொதுமக்களின் பயணத் தேவையைப் பயன்படுத்தி அதிகக் கட்டணம் வசூலிக்கும் போக்கிற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

பண்டிகைக் காலம் என்பது மகிழ்ச்சிக்கான காலமாக இருக்க வேண்டுமே தவிர, தனியார் பேருந்துகளின் கட்டணக் கொள்ளையால் பொதுமக்கள் கண்ணீர் வடிக்கும் காலமாக மாறி விடக்கூடாது! பல பத்தாண்டுகளாக எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும், நீடித்து தொடர்ந்து வரும் இந்த ஆம்னி பேருந்துகளின் கட்டண கொள்ளை பிரச்சனைக்கு, தமிழகத்தில் மாற்றம் கொண்டு வருவேன் என்று முதல்வர் பதவியில் அமர்ந்திருக்கும் தமிழக முதல்வர் விஜய் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்து பொதுமக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திவாரா என்பதை அடுத்த சில ஆண்டுகளில் பார்ப்போம்!



பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்த தாம்பரம் மாநகராட்சி காவல் துறையில் 'ஸ்மார்ட் காக்கி ரோந்து' திட்டம் அறிமுகம்



தாம்பரம் மாநகர காவல் துறையின் ரோந்து பணிகளை வலுப்படுத்தி, கண்காணிப்பை மேம்படுத்தும் விதமாக, நவீன வசதிகளுடன் கூடிய 'ஸ்மார்ட் காக்கி ரோந்து' என்ற புதிய திட்டத்தை தாம்பரம் மாநகர காவல் ஆணையா ஏ.அமல்ராஜ் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் காவல் துணை ஆணையர் கார்த்திகேயன், தாம்பரம் போக்குவரத்து துணை ஆணையர் பிரபாகர் உள்ளிட்ட ஏராளமான காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்

இந்த திட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி காவல் எல்லை பகுதியில் 73 காவல் துறையினா ரோந்து பணியில் ஈடுபடுவா. அவர்களின் இருசக்கர வாகனங்களில் ஒலிபெருக்கி, வாக்கிடாக்கி, உடலில் பொருத்தப்படும் கண்காணிப்பு கேமரா,

ஆண்ட்ராய்டு கைப்பேசி, நான்கு புறங்களிலும் ஒளிரும் எச்சரிக்கை விளக்குகள், சைரன் மற்றும் ஒளி விளக்குப் பட்டை, லத்தி வைக்கும் தாங்கி, தலைக்கவசம், பிரதிபலிப்பு மேலங்கி உள்ளிட்ட வசதிகள் உள்ளன. காவலாகள் 24 மணி நேரமும் 3 ஷிப்டுகளாக ரோந்து பணிகளில் ஈடுபடுவா. இதனால் மாநகராட்சி முழுவதும் காவல் துறையினரால் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு வளையத்துக்குள் இருக்கும் என்று தகவல்

மேலும் காவல்துறையினரின் நேரடி கண்காணிப்பை அதிகரித்து, குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவசர உதவி எண் 100 மூலம் பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக பதிலளித்து, பொதுமக்களுக்கு தேவையான உடனடி உதவிகள் வழங்கப்பட உள்ளது

பட்டுக்கோட்டையில் அதிரடி காட்டும் உதவி கண்காணிப்பாளர் அங்கீதா ஐபிஎஸ்

இரவும் பகலும் பம்பரமாய் சுழல்வதால் படையெடுக்கும் பொதுமக்கள்



தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகர காவல் நிலையம், அதிராம்பட்டினம் காவல் நிலையம், மதுக்கூர் காவல் நிலையம், பட்டுக்கோட்டை தாலுக்கா காவல் நிலையம், திருச்சிற்றம்பலம் காவல் நிலையம், பேராவூரணி காவல் நிலையம், சேதுபாவாசத்திரம் காவல் நிலையம் உள்ளிட்ட காவல் நிலையங்கள் பட்டுக்கோட்டை உதவி கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது

இந்த நிலையில் பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தொகுதிக்குட்பட்ட பல பகுதிகளில் நடக்கும் சிவில் சம்பந்தமான குற்றங்கள் மற்றும் கிரிமினல் சம்பந்தமான குற்றங்கள் தொடர்பாக வரும் புகார்களுக்கு காவல் நிலையங்களில் முறையான விசாரணை நடத்தப்படாமல் ஒருதலை பட்சமாக செயல்பட்டு வரும் சில போலீசாரால் பாதிக்கப்படும் நபர்கள் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் பல்வேறு உயர் அதிகாரிகளை தேடிச்சென்று புகார் மனு அளித்து வருவது பட்டுக்கோட்டை பேராவூரணி பகுதிகளில் தொடர்ந்து இருந்து வருகிறது

அதிலும் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையங்களுக்கு சென்று புகார் அளித்தால் அந்த புகார் மனுவை பெற மறுப்பதாகவும், மேலும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இழுத்தடிப்ப தாகவும் குற்றச்சாட்டு இருந்து வந்த நிலையில், தற்போது பட்டுக்கோட்டை உதவி கண்காணிப்பாளராக இளம் பெண் மிறிஷி அதிகாரி அங்கிதா நியமிக்கப்பட்டு பணியில் இருந்து வருகிறார். இவர் புகார் கொடுக்க வரும் பொது மக்களிடம் தன்னை ஒரு ஐபிஎஸ்

அதிகாரியாக கெத்து காட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக அவர்களிடம் கனிவுடன் புகார் பற்றி பொறுமையாக விசாரித்து அதன்படி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர்களுக்கு உத்தரவிடுகிறார் இதனால் இவர் பொறுப்பேற்றதிலிருந்து பாதிக்கப்பட்ட நபர்கள் குறிப்பாக பெண்கள் அதிக அளவில் உதவி கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தினந்தோறும் மாலை நேரங்களில் வருகை தருவதை அன்றாடம் காண முடிகிறது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர்கள் உதவி கண்காணிப்பாளரை நாடி வந்து புகார் கொடுத்து வருகின்றனர். ஒரு நியாயமான நேர்மையான அதிகாரியாக இருக்கும் இந்த உதவி கண்காணிப்பாளருக்கு ஒரு சில இன்ஸ்பெக்டர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதில்லை என்ற புகார் பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்தும் சமூக ஆர்வலர்களிடம் இருந்தும் குற்றச்சாட்டு உள்ளது

இதனை உதவி கண்காணிப்பாளர் எப்படி சரி கட்ட போகிறார் என்பதும் தன்னுடைய நேர்மையான பணியை செய்ய இடையூறாக இருந்து வரும் காவலர்களை எப்படி கையாள போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



நேர்மையின் மறுபெயர் நரேந்திர நாயர் IPS

நரேந்திர நாயர்! இந்த பெயர் சிட்டி போலீசில் மிகப் பிரபலம்! 2005 ஆம் வருட பேட்ச் டைரக்ட் IPS அதிகாரி! சிதம்பரம் ASPயாக காவல்துறையில் கால் பதித்தவர்! கால சுழற்சியில் SPயாக கலவர பூமியான நெல்லை, தூத்துக்குடி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் எந்த தள்ளாட்டமும் இல்லாமல் தாக்குப் பிடித்திருக்கிறார் நாயர்!

மேற்கண்ட மிரட்சியான மாவட்டங்களில் கீழே உள்ளவர்களை நம்ப முடியாது என்பதால் SP என்பவர் களத்தில் இறங்கியே தீர வேண்டிய கட்டாயம் இருக்கும்! மயிலை துணை கமிஷனர், கோவைIG, சென்னை தலைமையிட இணை கமிஷ்னர், மதுரை கமிஷனர் என்று ஒரு வலம் வந்திருக்கிறார்!

தென் சென்னையின் இணை பதவிக்கு பலத்த போட்டி இருக்கும் IPS அதிகாரிகளிடையே!

இங்கு அரியணையில் அமர்ந்த அத்தனை பேர்களும் அப்பழுக்கற்றவர்கள் என்று அடித்து சொல்ல முடியாது! ஆனால் அன்று அந்த சென்சிடிவான சிம்மாசனத்தில் அமர்ந்த நரேந்திரன் என்ற அந்த சீரியர் IPS அதிகாரிக்கு முகவரி தேவையில்லை!

அள்ளிக்கொடுக்கும் ஜோன் இது என்பதால், ப்ரஷர் கொடுப்பவர் பெர்ஃபார்மன்சில் பூஜ்ஜியம் என்று தெரிந்தாலும், அரசியல் நெருக்கடிக்கு அடிபணிந்து, போஸ்டிங்கில் கையெழுத்துதிடுவார்கள் உள்துறை உயரதிகாரிகள்.

ஆனால் நாயரின் அரவணைப்பில் அமைதிப் பூங்காவாக திகழ்ந்தது தென் சென்னை அன்று. கலவரம், கொந்தளிப்பு, சாலை மறியல் என்று அடுத்த ஜோன்களில் அசம்பாவிதங்கள் அரங்கேறும்போதும், ஆபத்பாந்தவனாக அதிடியில் வந்து நிற்பார்!

அதேபோல் பெசன்ட்நகர், வேளாங்கண்ணி தேர்த் திருவிழாவும், துணை கமிஷ்னர்களுக்கு தலைவலியானது. திருவிழாவில் லட்சக்கணக்கான மக்களோடு கிரிமினல்களும் கணிசமாக கலந் திருப்பார்கள். ஒரு சிறிய அசம்பாவிதமும் இல்லாமல் அதை வெகு லாவகமாக கையாண்டார் நாயர்!

இதையடுத்து மிகப்பெரிய சவாலானது பொங்கல் திருவிழா! கடற்கரைகள் களைக்கட்டும்! எந்த சறுக்கலும் இல்லாமல், விவேகத்தோடு வகுக்கப்பட்டது வியூகம். கடலோரம் வாங்கிய காற்று, அன்று சுகமாகவே இருந்தது நரேந்திரரின் நடவடிக்கைகளால்!

புத்தாண்டு நெருங்கினால் போதும், தென் சென்னையிலுள்ள ஸ்டார் ஹோட்டல்கள் பி.ஆர். (Public Resorts) லைசென்சுக்காக காவல் நிலையங்களில் கால்கடுக்க கடும் தவம் புரியும். இதில் கோடிகளை அள்ளி எடுத்திருக்கிறார்கள் கிரிமினல் குணம் கொண்ட சில இணை கமிஷனர்கள்! ஆனால் இது போன்ற சிற்றின்பங் களில் சுகம் காணாத, கை சுத்தமானவர் நரேந்திர நாயர்!

அதிகமாக பேச மாட்டார் நிருபர்களே ஆனாலும் அத்தனை நெருக்கத்தில் வைத்துக் கொள்ள மாட்டார்! இன்று அதே தென் சென்னையின் தலைமை பொறுப்பில் (Additional COP South) அமர்ந்து கிழக்கையும் தெற்கையும் சேர்த்து கட்டியாண்டுக் கொண்டிருக்கிறார்! அருண் கமிஷ்னராக இருந்தபோது ஏகப்பட்ட இம்சைகளை எதிர் கொண்டிருக்கிறார் நரேந்திரன்!

ஒரு நிலையில் தாக்குப் பிடிக்க முடியாமல் மெடிக்கல் லீவில் மாயமாகி விட்டார்! ஆட்சி மாற்றத்தின் ஆடி காற்றில் அம்மிகள் எல்லாம் பறந்த போதும் இந்த நேர்மையான மனிதரை

மட்டும் இன்று வரை நிலை நிறுத்திகொண்டிருக்கிறார்கள் தென் சென்னையில்! இது நரேந்திரரின் பெர்ஃபார்மன்ஸ்க்கு கிடைத்த பெருமை!

நாயருக்கு நெருக்கடியை கொடுத்து அவரை தூங்க விடாமல் துரத்திய மாவட்டங்கள் தூத்துக்குடி, நெல்லை, விழுப்புரம் போன்றவைகளே! குறிப்பாக விழுப்புரம் ஜாதி மோதல்களுக்கு பெயர் பெற்றது! ஒரு சிறிய என்றாலும் அது பூதாகரமாக கலவரத்திற்கு காரணமாகிவிடும்! பிரச்சனையே உருவெடுத்து

நாயர் விழுப்புரம் எஸ்.பி.ஆக இருந்தபோது சாதாரணமான ஒரு சாலை விபத்தும், சங்கராபுரம் தேரோட்டமும் சேர்ந்து விழுப்புரம் ரேஞ்சை வெல, வெலக்க செய்துவிட்டது! காவல்துறையில் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கலவரத்தை கட்டுக்குள் கொண்டு வரும் சாதுரியம் விரல் விட்டு எண்ணத்தக்க சில வீரியமிக்க IPS அதிகாரிகளிடமே இருக்கிறது! அந்த நெஞ்சுரம்மிக்க IPS அதிகாரிகளில் நரேந்திர ஆயிரம் ஒருவர்! நிலைமை கட்டுக்கடங்காமல் போன சமயத்தில் இவர் நேரடியாக களத்தில் இறங்கி கலவரக்காரர்களை கதி கலக்கி இருக்கிறார்! குழந்தைகள் உட்பட 45 தலித் குடும்பங்களை எந்த பாதகமும், இல்லாமல் பத்திரமாக மீட்டெடுத்து இருக்கிறார்! ஒரே இரவில் கலவரம் நடந்ததற்கான தடயமே தென்படாமல் தெருக்கள் வெறிச்சோடி காணப்பட்டது! நாயரின் அதிரடி நடவடிக்கையை இதற்கு காரணம்!

சிலர் சோர்ந்து போய் விடுவார்கள் ஆனால் சலிப்பின் சுவடுகளையே காண முடியாது நரேந்திரரின் முகத்தில்! அவர் எப்போதும் தன் கீழ் உள்ள அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் எடுக்கும் சிறப்பு பாடம் இதுதான்! நமக்கு அளவு கடந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது! ஆனால் அதிகாரம் என்றும் தலைக்கு ஏறக்கூடாது! எதிர்பவர்களை இறங்கி அடிக்கலாம்! சில நேரங்களில் தொடரும் பணி சுமைகளால் சோர்ந்து போய் விடுவோம்! தூக்கம் பறிபோய்விடும்! இரண்டு மணி நேரம் கூட தூங்க முடியாது! 24X7 ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்! சலிக்காமல் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்! சோர்வில் சுருண்டு விழுந்தால் மாவட்ட நிர்வாகம் மொத்தமாக பாதிப்புக்குள்ளாகும்' என்று நாயர் எடுக்கும் நாசுக்கான சிறப்பு பாடம் காவல்துறையின் பயிற்சி கல்லூரியிலும், போலீஸ் அகாடமியிலும் கூட கிடைக்காது!

ஹிறிஷிசி தேர்வை எதிர்கொள்ள தேவையான அறிவுரைகளையும் தன் ஆழ்ந்த அனுபவங்களையும் அள்ளிக் கொடுப்பார் இளைஞர்களுக்கு! குறிக்கோளோடு, இலக்கை நோக்கி பயணிக்க கடினமாக உழைக்க வேண்டும்! சாதித்து விட்டால் எல்லாமே உங்களை தேடி வரும்! தன்னம்பிக்கை மட்டுமே தோல்வியில் இருந்து நம்மை மீட்கும்' என்று UPSC தேர்வை எதிர்கொள்ளும் இளைஞர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதாக இருக்கும் நரேந்திரரின் வார்த்தைகள்! இந்த 'போதி மரத்திற்கு' இவரின் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்!



பஸ்சில் கிடந்த ரூ.30 ஆயிரத்தை ஒப்படைத்தவருக்கு பாராட்டு!

சென்னை, புழுதிவாக்கம், தியாகி பகத்சிங் தெருவைச் சேர்ந்தவர் பிரபாகரன், 52; சி.ஏ.எம்.எஸ்., என்ற தனியார் நிறுவனத்தில் துணை மேலாளர். மடிப்பாக்கம் குமரன் திரையரங்கம் நிறுத்தத்தில் இருந்து, தடம் எண் 14எம் மாநகர பேருந்தில் ஏறி பரங்கிமலை ரயில் நிலையம் நோக்கி சென்றார். வானுவம்பேட்டை அருகே சென்றபோது, கீழேகிடந்த பணத்தைப் பார்த்த பிரபாகரன், மடிப்பாக்கம் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். பின், அன்றிரவு 9:50 மணியளவில் காவல் நிலையம் சென்று பணத்தை போலீசாரிடம் ஒப்படைத்தார். போலீசார் முன்னிலையில் எண்ணியபோது, அதில் 30 ஆயிரம் ரூபாய் இருந்தது. பிரபாகரனின் நேர்மையை பாராட்டி, மடிப்பாக்கம் உதவி கமிஷனர் சுரேந்திரன் அவருக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார்.

புகழ்பெற்ற ஆடுதுறை ஆதீனம் நிலங்களில் குத்தகை நிலவரி வசூலிப்பதில் பலகோடி ரூபாய் முறைகேடு.

நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் வேண்டுகோள்



மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற திருவாவடுதுறை ஆதீனம் தமிழ்நாட்டின் மிகத் தொன்மையான மற்றும் முதன்மையான சைவ சமயத் திருமடங்களில் ஒன்றாகும்

இந்த புகழ்பெற்ற ஆதீனம் 14 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்டது. இது மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டத்தில் உள்ள திருவாவடுதுறை கோமுக்தீசுவரர் கோயில் (மாசிலாமணி ஈசுவரர்) அமைந்துள்ள ஊரில் அமைந்துள்ளது. இந்த ஆதீனத்தின் 24-வது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் பொறுப்பு பொறுப்பு வகித்து வருகிறார். இந்த ஆதீனத்தின் கீழ் 50-க்கும் மேற்பட்ட கிளை மடங்களும், மயூரநாதசுவாமி கோயில் உட்பட 75-க்கும் மேற்பட்ட சிவாலயங்களும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 1947 ஆகஸ்ட் 15 நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, பிரதமர் ஜவகர்லால் நேருவிடம் ஆட்சி மாற்றத்தின் அடையாளமாக வழங்குவதற்காக, திருவாவடுதுறை ஆதீனத்தால் புனித செங்கோல் வழங்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு பெருமைகளையும், சிறப்புகளையும் கொண்ட ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் அதனை நிர்வகிப்பவர்களால் பலவிதமான மோசடிகளும் தவறுகளும் நடைபெறுகிறது என்று பல்வேறு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.



ஆவுடையார் கோயில் சுற்றி உள்ள பேராவூரணி, காலகம், கொன்றைக்காடு இவை அனைத்தும் ஆடுதுறை ஆதினத்தின் சொத்துக்கள் ஆகும். இதில் அந்த காலத்தில் குடியிருந்த மக்களுக்கு பட்டா உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மீதமுள்ள சொத்துக்கள் அனைத்தும் ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. வருடத்திற்கு ஒரு முறை அதற்கு மக்கள் வரி கட்டி விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்த வரிகட்டும் முறையை ஆவுடையார் கோயிலில் உள்ள கணக்கு பிள்ளை செல்லையா என்பவர் தனக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு 1,000 ரூபாய், 2000 ரூபாய் வரி செலுத்த வேண்டியதை ஸ்லீப் ரசீது கொடுத்துவிட்டு, ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று பணம் வசூலித்து ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு வருகிறார். மேலும், ஒரே இடத்தை பேராவூரணி காலகத்தில் இரண்டு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டு கலவரத்தை உருவாக்குகிறார் கணக்குப்பிள்ளை செல்லையா. அவருக்கு துணையாக ஓய்வு பெற்ற தாசில்தார் கதிரேசன் துணை போகிறார். தலையாரி கார்த்திகேயன் மட்டும் (Eo) நடுநிலையோடு செயல்படுகிறார். கோயில் நிர்வாகத்தில் பல கோடி ரூபாய் மோசடி செய்கிறார்கள். இந்த விஷயம் ஆதீனத்திற்கு தெரியுமா இல்லை இந்த பணம் ஆதீன நிர்வாகத்திற்கு செலுத்தப்படுகிறதா? என்று தெரியவில்லை. ஆதீனத்திற்கு தெரியாமல் முறைகேடாக பணம் வசூல் செய்யப்பட்டால் செல்லையா மற்றும் அவருக்கு உதவி புரிபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்

தென்காசி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக Dr.R.ஸ்டாலின் IPS நியமனம்



பயத்தில் மிரளும் கனிம வளங்கள் கடத்தல்காரர்கள்

டாக்டர் R.ஸ்டாலின் IPS தென்காசி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பு சென்னை வடக்கு மண்டல பொருளாதார குற்றப்பிரிவு எஸ்பியாகப் பணியாற்றினார். கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இதற்கு முன்பு பணியாற்றி பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் எடுத்து பொதுமக்களின் பாராட்டை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக கேரளா எல்லை பகுதியான கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற கனிமவள கொள்ளைகளுக்கு எதிராக திறம்பட செயலாற்றியவர். போலீஸ் பொதுமக்கள் நல்லுறவில் புதிய மாற்றங்களை கொண்டு வந்தவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நிமிர் என்ற ஒரு புதிய அமைப்பை காவல்துறையில் உருவாக்கி அதன் மூலம் பள்ளிக்கு செல்லாத குழந்தைகளை கண்டறிந்து அவர்களை பள்ளிக்கு அனுப்பி வைத்தல், ஆதரவின்றி பேருந்து நிலையம் கோவில் போன்ற பொது இடங்களில் இருந்து வந்த மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஏழைகளை ஆதரவற்றோர் இல்லங்களில் சேர்த்து டாக்டர் R.ஸ்டாலின் IPS பொது மக்களிடையே மிகுந்த நன்மதிப்பை பெற்றார்.

கனிம வளங்கள் கொள்ளையில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் டாக்டர் ஸ்டாலின் ஐபிஎஸ் தமிழக கேரள எல்லை பகுதியான புளியரை பகுதியில் நடைபெறும் கனிம வள கடத்தல்களை கட்டுக்குள் கொண்டு வருவார் என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

இளைஞர்களின் நலன்காக்க, போட்டித் தேர்வர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவு!



அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட வயதை ஐந்து ஆண்டுகள் உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையொட்டி திருச்சி மாநகர காவல்துறை சார்பில் என்.எஸ்.பி.சாலையில் தெப்பக்குளம் அருகே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காவல் உதவி மையத்தை

மாநகர போலீஸ் கமிஷனர் ரூபேஷ் குமார் மீனா திறந்து வைத்து, பார்வையிட்ட காட்சி.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருச்சி மாநகர காவல்துறை சார்பில் என்.எஸ்.பி.சாலையில் தெப்பக்குளம் அருகேஅமைக்கப்பட்டுள்ள தற்காலிக காவல் உதவி மையத்தை மாநகர போலீஸ் கமிஷனர் ரூபேஷ் குமார் மீனா திறந்து வைத்து, நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:- தீபாவளி நேரத்தில் குற்ற நடத்தை உடைய நபர்களை கண்காணிக்க தெப்பக்குளம், என்.எஸ். பி.சாலை புறக்காவல் நிலையம், மற்றும் சத்திரம் பேருந்து நிலையங்களில் அதிநவீன சுழலும் பிடி இசட் கேமராக்கள் நிறுவப்பட்டு உள்ளது. அதேபோல் காந்திமார்க்கெட் ஆர்ச், பெரிய கடை வீதி, சூப்பர் பஜார், ஜாபர்ஷா தெரு, மதுரை ரோடு, நந்தி கோவில் தெரு, மேலபுலிவார்டு ரோடு, சத்திரம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மொத்தம் 152 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, குற்ற நடத்தைக்காரர்களை, கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குரிய மானிட்டர்கள் அமைக்கப்பட்டு அவற்றை இயக்குவதற்கு காவலர்கள் நியமிக்கப்பட்டு அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழா வண்ணம் திருச்சி மாநகரில் உள்ள நவீன காவல் கட்டுப்பாட்டு அறை மூலமாகவும், புறக்காவல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மானிட்டர்கள் மூலமாகவும், நாள் முழுவதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் கூட்டம் நிறைந்த பகுதிகளில் ரோந்து பணியில் உள்ள காவலர்கள் எப்ஆர்எஸ் செயலி மூலம் சந்தேக நபர்களை முக அடையாளங்களை சரிபார்த்து, கெட்ட நடத்தைகாரர்களின் நடவடிக்கை தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. கடைவீதி பகுதிகளில் வாகனங்கள் நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. மேலும், பொதுமக்கள் முன் பின் தெரியாதவர்களிடம் தங்களது உடைமைகளை ஒப்படைக்கவேண்டாம் என்றும், சந்தேகப்படும்படியான நபர்களாக இருந்தால் அருகில் உள்ள காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்றும், காவலர் என்று கூறிக்கொண்டு தங்கள் நகைகளை பத்திரமாக பொட்டலத்தில் மடித்து தருகிறேன் என்று கூறுபவர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் திருச்சி மாநகர காவல் துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு மற்றும் போக்குவரத்து ஒழுங்குப்பிரிவு என மொத்தம் சுமார் 200 காவல்துறையினர் பாதுகாப்பு பணிக்கு நியமிக்கப்பட்டு, பொதுமக்கள் பாதுகாப்பாகவும், அச்சமின்றி கடைவீதிக்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்ல விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், காவல்துறையினரின் அறிவுரைகளை கடைபிடித்து, பொதுமக்கள் காவல்துறையினருக்கு தங்களது முழு ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும். குற்ற சம்பவங்களில் ஈடுபடும் சிறுவர்களை கண்காணிக்க குழு அமைக்கப்படும் இவ்வாறு போலீஸ் கமிஷனர் ரூபேஷ் குமார் மீனா கூறினார்.பேட்டியின் போது துணை கமிஷனர்கள், உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள் உடன் இருந்தனர்.

ககன்தீப் சிங்பேடி, இ.ஆ.ப., தலைமையில்,

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே ஈரக் கழிவுகள், உலர் கழிவுகள், சுகா தாரக் கழிவுகள், அபாயகரமான கழிவுகள் ஆகியவற்றை பொது மக்கள் தனித்தனியே பிரித்து வழங்குதலை உறுதிப்படுத்துதல், பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கிடங்குகளில் உயிரி அகழ்ந்தெடுத் தல் முறையில் கழிவுகளை அகற்றுதல் (Bio Mining), குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளு தல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண் மைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர்கள் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் (பணிகள்), திருமதி க.கற்பகம், இ.ஆ.ப அவர்கள் (கல்வி), துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வட்டார துணை ஆணையாளர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மேற்கு மண்டல காவல்துறைத் தலைவர் மற்றும் கோவை மாநகர பொறுப்பு காவல் ஆணையர் திருமதி.R.V.ரம்யா பாரதி IPS., கோவை மாநகர துணை ஆணையர் தெற்கு திரு.G.கார்த்திகேயன் மற்றும் காவலர்களுடன் கோவை மாநகரில் பொதுமக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதிகளான காந்திபுரம் பேருந்து நிலையம், கிராஸ்கட் ரோடு ஆகிய பகுதிகளில் நடை ரோந்து மேற்கொண்டு பொது மக்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

அடுத்தடுத்து அதிரடி காட்டும் முதல்வர் விஜய்.

6 மாதம் அனுபவத்தில் அடுத்த கட்ட பாய்ச்சலுக்கு தயார். சாதாரணமாக எடை போட்டவர்களுக்கு எச்சரிக்கை...



தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தனது ஆறு மாத கால அரசு நிர்வாகம் அனுபவத்தை கொண்டு, தற்போது அடுத்தடுத்து அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தன்னை சாதாரணமாக எடை போட்டவர்களுக்கு உரிய எச்சரிக்கை அளித்து, தான் மற்றவர்கள் நினைப்பது போல் எளிதாக சமாளிக்க கூடியவன் இல்லை என்று தனது செயல் மூலம் நிலைநாட்டி உள்ளார்

பெண்கள், குழந்தைகளை பாதுகாக்க புதிய சிறப்பு நீதிமன்றங்கள்

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விரைந்து விசாரிக்க 26 புதிய சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டு உள்ளார் 12 புதிய சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் 14 கூடுதல் சிறப்பு நீதிமன்றங்கள் என மொத்தம் 26 சிறப்பு நீதிமன்றங்கள் ரூ.46.59 கோடி மதிப்பில் இந்த நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன

போக்சோ (POCSO – பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012) மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வழக்குகளை விரைவாக விசாரித்து தீர்வு காணும் வகையில் இவை செயல்படும். ஏற்கெனவே உள்ள சிறப்பு நீதிமன்றங்களுடன் சேர்த்து, தமிழ்நாட்டில் உள்ள 47 காவல் மாவட்டங்களில் மொத்தம் 52 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பாட்டுக்கு வரும்

இது தவிர, போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின்கீழ் (NDPS Act) வழக்குகளை விசாரிக்க 4 புதிய சிறப்பு நீதிமன்றங்களும் அமைக்கப்படவுள்ளன

புதுக்கோட்டையில் முதல்வர் விஜய் அதிரடி



தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

திருச்சி விமான நிலையத்தில் இருந்து முதல்வர் விஜய், சாலை வழியாக புதுக்கோட்டைக்கு வந்தார். மாத்தூர், மண்டையூர், கீரனூர்,

நார்த்தாமலை மற்றும் சிப்காட் பகுதிகளில் தவெக தொண்டர்கள் மற்றும் பொதுமக்களின் உற்சாக வரவேற்பை ஏற்றுக் கொண்டார். ரூ.23 கோடி செலவில் கட்டப்பட்ட புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூ.8 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய நவீன உள்விளையாட்டரங்கம் உள்ளிட்ட 44 முடிவுபெற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார். மேலும் 70 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். விழாவில் பங்கேற்ற பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவின் போது கையில் மனுவுடன் கண்ணீர் மல்கக் காத்திருந்த மாற்றுத்திறனாளிப் பெண்ணிடம் நேரில் சென்று ஆறுதல் கூறி, அவரது மனுவைப் பெற்று உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்



டாஸ்மாக் ஊழியர்கள் சஸ்பெண்ட்

தமிழ்நாடு முழுவதும் காலி மதுபானப் பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு டாஸ்மாக் ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்தப் புதிய நடைமுறையை செயல்படுத்துவதால் ஏற்கெனவே உள்ள பணிகளுடன் கூடுதல் சுமை ஏற்படுவதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் நவம்பர் 1 ஆம் தேதி தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் டாஸ்மாக் ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏராளமான டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டிருந்தன. நிர்வாகத்தின் முன் அனுமதியோ, முன்னறிவிப்போ இன்றி ஊழியர்கள் கடைகளைத் திறக்காமல் இருந்தது பரபரப்பை ஏற்படுத்தியது

இதைத்தொடர்ந்து, முன்னறிவிப்பின்றி கடைகளைத் திறக்காமல் இருந்த மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது டாஸ்மாக் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. நவம்பர் 1 ஆம் தேதி கடைகளைத் திறக்காத 960 ஊழியர்களுக்கு விளக்கம் கேட்டு மெமோ வழங்கப்பட்டது. இதையடுத்து, மெமோ வழங்கப்பட்ட 960 ஊழியர்களில் 241 பேரைத் தவிர மற்றவர்கள் தங்களது கடைகளைத் திறந்துள்ளனர். ஆனால், தொடர்ந்து கடைகளைத் திறக்காமல் இருந்த 241 ஊழியர்களைப் பணியிடை நீக்கம் செய்து டாஸ்மாக் நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் 760 ஊளியர்களுக்கு துறைரீதியான விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. மறுநாளும் கடைகளைத் திறக்காதவர்களுக்கு மீண்டும் டாஸ்மாக் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் அரசு சார்பில் 03.11.2026 அன்று நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் விஜய் கலந்து கொண்டு 26 ஆயிரம் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு தொழில் தொடங்குவதற்காக ரூ.3 ஆயிரம் கோடி மதிப்பில் வங்கி கடன் உதவி வழங்கினார்.

இவ்வாறு முதலமைச்சர் ஜோசப் விஜய், தனது அரசு பல்வேறு விஷயங்களில் தீவிரமாக அதிரடி நடவடிக்கைகளை எடுக்க தயங்காது என்று அனைத்து துறை அரசு ஊழியர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. மற்றும் பிற கட்சி அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் தான் மற்றவர்கள் கூறுவது போல் விஷயம் தெரியாத சாதாரண மனிதன் இல்லை என்றும், பொதுமக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் துணிந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்க தயங்க மாட்டேன் என்பதையும் தெரிவித்துள்ளார்

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள், பணி ஓய்வு பெறுகின்ற 11 காவல் அதிகாரிகள், அமைச்சுப்பணியாளர் மற்றும் காவல் ஆளிநர்களின் பணியை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்.



சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரிந்து வரும் நிர்வாக அதிகாரி திரு.கலைச்செல்வம், காவல் ஆய்வாளர் (ஆயுதப்படை) திரு.வெங்கட்ராஜ், காவல் உதவி ஆய்வாளர்கள் திரு.தினகரன், திரு.நந்தகுமார், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ரவிச்சந்திரன், துரைமுருகன், சீனிவாசன், பத்மராஜ், செல்வம், காந்தி மற்றும் ஆயுதப்படை தூய்மை பணியாளர் திருமதி.சுசீலா என மொத்தம் 11 காவல் அதிகாரிகள், அமைச்சுப்பணியாளர் மற்றும் காவல் ஆளிநர்கள் (31.10.2026) அன்று பணி ஓய்வு பெறுகின்றனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் பு.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் (30.10.2026) அன்று வேப்பேரி, காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவலில் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்ற 11 காவல் துறையினர், 29 ஆண்டுகள் முதல் 40 ஆண்டுகள் வரை சிறப்பாக பணிபுரிந்ததை பாராட்டி, தமிழக காவல்துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை சேர்த்ததை நினைவு கூர்ந்து பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்.

மேலும், காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்தும், பணி ஓய்வு பெறுகின்ற காவல் அதிகாரிகள், அலுவலர்கள் தங்களது உடல் நலத்தையும், குடும்பத்தையும் பேணி காக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் காவல் துணை ஆணையாளர் (நிர்வாகம்) திருமதி.G.சுப்புலட்சுமி, இ.கா.ப., திரு.P.சுந்தரவடிவேல் (நலன் மற்றும் எஸ்டேட்), காவல் அதிகாரிகள் மற்றும் ஒய்வு பெறுகின்ற காவல் அலுவலர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

தமிழக விவசாய நிலங்களில் வடமாநில கூலித் தொழிலாளர்கள்.

எதிர்கால தமிழக விவசாயம் கேள்விக்குறி?

எதிர்ப்பும்! ஆதரவும்! முழுமையான ஆய்வு கட்டுரை...

தமிழ்நாட்டில் விவசாயம் ஒரு முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. விவசாயிகள் நிலத்தடி (பம்புசெட்) நீர் மற்றும் ஆறுகளின் மூலம் கிடைக்கும் நீரை நம்பி அதிக அளவில் நெல் சாகுபடி செய்து வருகின்றனர்

இந்த நிலையில், விவசாயப் பணிகளுக்குத் தேவையான ஆட்கள் கிடைக்காததால் பல ஆண்டுகளாக விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். நடவு செய்தல், அறுவடை பணிகளை இயந்திரம் மூலம் விவசாயிகள் மேற்கொண்டு வந்தாலும் சம்பா, தாளடி பருவத்தில் அடிக்கடி மழை பெய்யும் என்பதாலும், இயந்திர நடவு செய்தால் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதமடைவதை தவிர்க்க பல விவசாயிகள் பழைய முறைப்படி கூலி ஆட்களை வைத்து நாற்று நட்டு, பெண் தொழிலாளர்கள் மூலம் நடவு செய்து வருகின்றனர்

ஆனால், தற்போது கூலித் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்திற்கு சென்று விடுவதால், சம்பா, தாளடி, குறுவை சாகுபடி பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயம் செய்ய முடியாமல் சொந்த நிலம் வைத்து விவசாயம் செய்பவர்கள் கடும் நெருக்கடியை சந்தித்து வருவதாக கூறப்படுகிறது

இதனால் விவசாயப் பணிகளின் போது 150 நாள் (MGNREGA) வேலையை நிறுத்தி வைக்கும்படி விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தும், எந்தவொரு பயனுமில்லை. இதனால், ஆட்கள் பற்றாக்குறையால் பிறமாநில தொழிலாளர்களின் உதவியை விவசாயிகள் நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். பிற மாநில தொழிலாளர்கள், தற்போது தமிழகத்தில் விவசாயத் துறையிலும் முக்கியப் பங்காற்றி வருகின்றனர்



மேற்கு வங்கம், பீகார், ஒடிசா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிறப்பாகவும், திருந்திய நெல் சாகுபடி முறையிலும் வேகமாக நாற்று நடுகின்றனர். ஒரு





நாளைக்குச் சுமார் 3 முதல் 5 ஏக்கர் வரை இவர்களால் நடவு செய்ய முடிகிறது. உள்ளூர் தொழிலாளர்களை ஒப்பிடும்போது பிற மாநில கூலித் தொழிலாளர்கள் மூலம் விவசாயம் கூலிச் செலவு குறைவாக இருப்பதால், விவசாயிகளுக்கு இது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. பீகார், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் குறிப்பிட்ட காலங்களில் விவசாய வேலைகள் இல்லாததாலும், அங்கு கிடைப்பதை விடத் தமிழகத்தில் நல்ல கூலி கிடைப்பதாலும் கூலித் தொழிலாளர்கள் குழுக்களாக இங்கு வந்து பணிபுரிகின்றனர்

பிறமாநில கூலித் தொழிலாளர்கள் தமிழக விவசாய நிலங்களில் பணிபுரிந்து வருவது பல விவசாய தொழிற்சங்கங்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது. இவ்வாறு பிறமாநில தொழிலாளர்களை பயன்படுத்துவதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால் சொந்த நிலம் வைத்து விவசாயம் செய்பவர்கள் தமிழகத்தில் கூலித் தொழிலாளர்கள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருப்பதாகவும், மேலும் அவர்களை கண்காணித்து சிறப்பாக பணி செய்ய வைப்பது முடியாத காரியமாக இருப்பதாகவும் கருத்து தெரிவிக்கின்றனர்

இவ்வாறு பிறமாநில கூலித் தொழிலாளர்கள் இங்கு பணி புரிவது பிற்காலத்தில் தமிழகத்தில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும் என்று கணிக்கப்படுகிறது. இங்கே உழைத்து வருமானம் சம்பாதிக்கும் பெரும்பாலான தொழிலாளர்கள் தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் இங்கு பணிக்கு அழைத்து வருகின்றனர். தங்கள் வருமானத்தில் மிகக் குறைந்த அளவே அவர்கள் செலவு செய்து மீதி பணத்தை சேமித்து தங்கள் சொந்த மாநிலத்தில் உள்ள ஊர்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். அங்கு மிகவும் கஷ்டத்தில் வாழ்ந்த மக்கள் தற்பொழுது சொந்த வீடுகள் கட்டியும், நிலங்கள் வாங்கியும் தங்கள் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது அந்தந்த மாநிலங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவது மனமகிழ்ச்சியையும், நிம்மதியையும் தந்தாலும், தமிழகத்தில் இது ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்ச உணர்வும் ஏற்படுகின்றது

அந்த பிற மாநில தொழிலாளர்கள் திடீரென்று தமிழகத்திற்கு வருவது குறைந்தால் அப்பொழுது தமிழக விவசாயத்தின் நிலையை நினைத்து அச்சம் ஏற்படுகிறது. மேலும் பிற மாநிலத் தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தில் திறம்பட பணிபுரிவதாக கூறப்படுவதால், தமிழக விவசாயக் கூலி தொழிலாளர்கள் தங்களின் கூலியை உயர்த்த முடியாமல், தமிழக விலைவாசி உயர்வுக்கு ஏற்றார் போல் தங்களின் வாழ்க்கை தரத்தை மேலும் உயர்த்த முடியாமல் சிரமப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

எனவே இதுகுறித்து சொந்த நிலங்கள் வைத்திருப்பவர்களும், தமிழக அரசும், தமிழக விவசாய சங்கங்களும், விவசாய கூலி தொழிலாளர்களும் இதற்கு சரியான முடிவு எடுத்து சிக்கல்கள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் என்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்

சீனப் பட்டாசு விற்பனைக்கு எச்சரிக்கை விதிமீறினால் கடை உரிமம் ரத்து!



சீர்காழி சரகக் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. P. சரவணன் தலைமையில், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் பட்டாசுக் கடை உரிமையாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் சீனப் பட்டாசுகளை விற்பனை செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது. உரிமத்தில் குறிப்பிடப்பட்ட அளவில் மட்டுமே பட்டாசுகளை விற்பனை செய்யவும், தீத்தடுப்பு உபகரணங்கள் மற்றும் தொழிலாளர் காப்பீட்டை உறுதிசெய்யவும் அறிவுறுத்தப்பட்டது. விதிமுறைகளை மீறும் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீவினைகளை அகற்றிய தீபாவளி



சி.சுபாஷ் சந்திர போஸ்
(காவல் துணைக் கண்காணிப்பாளர்
ஓய்வு தஞ்சாவூர்)

நரகாசுரனின் அட்டூழியம் நாடெங்கும் பரவிட
நாட்டுமக்கள் பக்தர்கள் வேதனைகளை சுமந்திட

துன்பங்களை தாங்காது மகாவிஷ்ணுவுடன் முறையிட
துவங்கிய போரினால் அசூரன் அழிந்திட

தீவினைகள் ஒழிந்ததால் நன்மைகள் விளைந்தது
தீபங்கள் வரிசையாக எங்கும் ஒளிர்ந்தது

அறியாமை நீங்கி அறிவு பிறந்தது
அன்பின் ஆதிக்கம் எங்கும் நிறைந்தது

அதிகாலை எண்ணெய் தேய்த்து குளித்து
அகமும் புறமும் தூய்மையை கொடுத்து

புத்தாடை அணிந்து பட்டாசு வெடித்து
பூஜிக்கும் பலகாரங்களை சாப்பிட்டு மகிழ்ந்து

நாடெங்கும் கொண்டாடும் தீபஒளி திருநாள்
வீடெங்கும் ஆனந்தம் பொங்கிடும் பெருநாள்

அதிரடி நடவடிக்கைகளுக்கு அடையாளமாக திகழும் தாம்பரம் போக்குவரத்து காவல் துணை ஆணையர் Dr.K.பிரபாகர் IPS



R.K.பிரபாகர் IPS தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய காவல் பணி (IPS) அதிகாரி. இவர் தாம்பரம் போக்குவரத்து காவல் துணை ஆணையராகவும், மத்திய குற்றப்பிரிவு (Central Crime Branch) துணை ஆணையராகவும் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு காவல் துறையின் கீழ் சென்னை மற்றும் தாம்பரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்

இவர் கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளராக (SP) சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். கரூரில் எஸ்பியாக இருந்தபோது, பொதுமக்களிடம் இருந்து திருடுபோன மற்றும் காணாமல் போன 300க்கும் மேற்பட்ட மொபைல் போன்களை சைபர் கிரைம் உதவியுடன் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்த நடவடிக்கை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இதற்கு முன்னதாக சென்னை பரங்கிமலை பகுதியின் துணை ஆணையராகவும் (DCP) பணியாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு.

கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கள்ளச்சாராயம், சட்டவிரோத சூதாட்டம் மற்றும் கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடும் சமூக விரோதிகளுக்கு எதிராகக் கடுமையான குண்டாஸ் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தார். எஸ்பி அலுவலகங்களில் வாரந்தோறும் நடத்தப்படும் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம்களில் நேரடியாகப் பங்கேற்று, எளிய மக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண உத்தரவிட்டார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலராக (P.R.O.) சுருளி பிரபு நியமனம்



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலராக (P.R.O.) சுருளி பிரபு நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

அவரது பணி சீறக்க நீதியின் நுணறிவு மரத இதழ் சார்பில் வாழ்த்துக்கள்

இவர் இதற்கு முன்பு 2017–ஆம் ஆண்டு இதே தஞ்சாவூர் மாவட்டத்தில் திரு.அண்ணாதுரை அவர்கள் மாவட்ட ஆட்சியராக இருந்தபோது இதே செய்தி மக்கள் தொடர்புத் துறை அதிகாரி பதவியில் பணிபுரிந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

இந்த தஞ்சாவூர் மாவட்டத்தை பற்றி நன்றாக அறிந்தவர் என்பதும் பழகுவதற்கு இனிமையானவர் அனைவருக்கும் நன்கு பரிச்சயமானவர் என்பதும் சிறப்பு வாய்ந்தது

9 மாவட்டங்களில் 232 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 451 கிலோ கஞ்சா அழிப்பு!









போதையில்லா தமிழ்நாடு இலக்கை நோக்கிய போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மத்திய மண்டல காவல்துறைக்கு உட்பட்ட தஞ்சாவூர் மற்றும் திருச்சி சரக காவல்துறையினரால் 9 மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட 232 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மொத்தம் 451 கிலோ கஞ்சா, நீதிமன்ற உத்தரவின்படி (03.11.2026) அன்று தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகே உள்ள அயோத்திப்பட்டியில் செயல்படும் தனியார் நிறுவனத்தில் உயர் வெப்பநிலை எரியூட்டும் உலை (Incinerator) மூலம் பாதுகாப்பான முறையில் தீயிட்டு அழிக்கப்பட்டது.

இந்நிகழ்வு தஞ்சாவூர் சரக காவல்துறை துணைத் தலைவர் திரு. ஜியாவுல் ஹக், இ.கா.ப., அவர்கள் மற்றும் திருச்சி சரக காவல்துறை துணைத் தலைவர் திரு. சி.பி. சக்ரவர்த்தி, இ.கா.ப., அவர்கள் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. சுந்தரவதனம், இ.கா.ப., அவர்கள், அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செல்வகுமார், இ.கா.ப., அவர்கள் மற்றும் மத்திய மண்டலத்தைச் சேர்ந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இருபது ஆண்டுகளாக 100% தேர்ச்சி பெற்று சாதனை படைத்த அரசு உயர்நிலைப் பள்ளி

விளையாட்டு மைதானம் இல்லை 60 சென்ட் இடத்தில் 1500 மாணவர்கள் பெற்றோர்கள் கிராம மக்கள் வேதனை

தஞ்சை மாவட்டம் பேராவூரணி அருகே உள்ள கொன்றைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளி மிகவும் பழமையான கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் பள்ளி. அரசு நடுநிலைப் பள்ளியாக இருந்த இப் பள்ளி அதன் பின்பு அப்போதைய ஊராட்சி மன்ற தலைவராகவும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் இருந்த ராமமூர்த்தி மற்றும் உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் தீவிர முயற்சியால் பள்ளி தரம் உயர்த்தப்பட்டு 19 98 முதல் அரசு உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வந்தது. இந்தப் பள்ளி வெறும் 60 சென்ட் நிலப் பரப்பில் இயங்கி வந்தாலும் கூட இந்தப் பள்ளியின் கல்வித்தரம் மிக ப் பரவலாக பேசப்படும் நிலையில் அரசு பொதுத்தேர்வில் ஆரம்ப கட்டத்தில் 96 சதவீத தேர்ச்சி மற்றும் 98 சதவீத தேர்ச்சி என இருந்து அதன் பின்பு கடந்த 20 வருடங்களாக 100% தேர்ச்சியை இப்பள்ளி பெற்று இந்த பள்ளி தஞ்சை மாவட்ட அளவில் சிறந்து விளங்கி வருகிறது. இந்தப் பள்ளியில் படித்த மாணவர்கள் பெரும்பாலானோர் பொது தேர்வில் 400 க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றும் அதைத் தாண்டி மாவட்ட அளவில் பொதுத்தேர்வில் முதலிடத்தை பல தடவை பெற்றும் அசத்தி வருகின்றனர் . அந்த அளவுக்கு இப் பள்ளி தனியார் பள்ளிகளுக்கு டப் கொடுத்து வருகிறது. இந்தப் பள்ளிக்கு இட வசதி குறைவாக இருந்தாலும் கூட ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கை அதிகரித்துக் கொண்டே இருந்துவருகிறது. கடற்கரை கிராமங்களில் இருந்தும் பட்டுக்கோட்டை அருகே இருந்தும், அதிலும் பேராவூரணியிலிருந்து மட்டும் கிட்டத்தட்ட 650 மாணவர்கள் இங்கு வந்து படித்து வருவதாக கூறப்படுகிறது. கடந்த அட்மிஷனில் மட்டும் 350 மாணவர்கள் சேர்ந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம் இந்தப் பள்ளி கல்வித் தரத்திலும் விளையாட்டு மற்றும் கலை



இலக்கிய போட்டிகளிலும் மாநில மாவட்ட அளவில் சிறந்து விளங்குவதை அறிந்த சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலான பெற்றோர்கள் தனியார் பள்ளியில் படித்த தங்களது பிள்ளைகளை தாங்களாகவே முன்வந்து இப்பள்ளியில் சேர்த்து வருவது தொடர்ந்து வந்த நிலையில் குறிப்பிட்ட சில சிரமங்களால் அதாவது பள்ளிக்கான இடவசதி குறைவு கட்டிட வசதி குறைவு மேலும் விளையாட்டு மைதானம் இல்லை என்ற நிலையில் கூடுதல் அட்மிஷங்களை தவிர்க்க வேண்டிய சூழலுக்கு பள்ளி நிர்வாகம் சென்றது. பள்ளியின் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்த நிலையில் பள்ளிக்கு அருகில் உள்ள பள்ளிக்கு சொந்தம் எனக் கூறப்படும் மூன்று ஏக்கர் இடத்தில் பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக பள்ளி நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்வந்த நிலையில் அந்த மூணு ஏக்கர் இடம் தொடர்பாக அதே ஊரைச்



சேர்ந்த சிலர் பள்ளிக்கு எதிராக செயல்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. கிராம மக்கள் பள்ளி வளர்ச்சி தேவை என்ற நிலையிலும் எதிர்கால குழந்தைகள் நன்கு படித்து சமூகத்தில் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என குழந்தையை பெற்ற பெற்றோர்களும் பள்ளியின் வளர்ச்சியை கருதி பள்ளி நிர்வாகத்திற்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்து வருகின்றனர். இது பற்றி அந்தப் பள்ளியில் படிக்கும் பெற்றோர்களிடம் நாம் விசாரித்த பொழுது

புனல்வாசல் அருகே உள்ள சின்ன தெற்கு காடு கிராமத்தைச் சேர்ந்த கலா என்பவரின் மகள் துர்கா ஸ்ரீ அருகிலேயே பள்ளிக்கூடம் இருந்தும் கொன்றைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளியில் தனது அக்கா மகள் படித்து அதிக மதிப்பெண் பெற்றதால் தன்னுடைய மகளையும் அங்கு சேர்த்து படிக்க வைத்துள்ளேன் எனக்கு எந்த சிரமமும் இல்லை அவளுக்கும் எந்த சிரமமும் இல்லை பள்ளி நிர்வாகம் அந்த அளவிற்கு



குழந்தைகள் மீதும் குழந்தைகளின் படிப்பு மீதும் அக்கறை காட்டி வருகின்றனர். இதுபோன்ற ஸ்கூல் நாங்கள் படிக்கும் போது இல்லை என்றார்

ஒட்டங்காடு அருகே உள்ள மாரியம்மன் கோவில் தெரு பகுதியைச் சேர்ந்த லட்சுமி என்பவர் கூறுகையில் எனது மகள் பாண்டி மீனா ஏழாவது கொன்றைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார். எத்தனையோ பிரைவேட் ஸ்கூல் இருந்தும் எனது பெண்ணை அங்கே படிக்க வைப்பதன் காரணம் அங்கே ஆசிரியர்கள் நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கின்றனர். பள்ளி முடிந்ததும் வெளியூரிலிருந்து வரும் அனைத்து பெண் மற்றும் ஆண் குழந்தைகளையும் ஆசிரியர்களே பஸ் ஸ்டாப் புக்கு வந்து அவர்களை பேருந்தில்



ஏற்றிவிட்டுத்தான் செல்கின்றனர். மேலும் பிரைவேட் ஸ்கூலுக்கு இணையாக அங்கு யூனிஃபார்மில் இருந்து ஷூ வரை அனைத்து வசதிகளையும் ஒரு பைசா செலவில்லாமல் எங்கள் குழந்தைகளுக்கு கிடைத்து விடுகிறது இதைவிட எங்களது குழந்தைக்கு என்ன வேண்டும் என்றார்

பிரபாகரன் என்பவர் கூறுகையில் எனது மகள் நிசாந்தினி எட்டாவது கொன்றைக்காடு அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார் எனது மூத்த மகள் செல்வலட்சுமி கடந்த 2015 ஆம் ஆண்டு அதே பள்ளியில் படித்து 425 மதிப்பெண்கள் பெற்று தற்போது கல்லூரி படித்து வருகிறார். இதன் காரணமாகவே எனது இரண்டாவது மகளையும் நான் அங்கே படிக்க வைத்துள்ளேன் என்றார்.





மேலும் கவிதா என்பவர் கூறுகையில் எனது மகன் எட்டாவது வரை சின்ன தெற்கு காடு கிராமத்தில் படித்து வந்தார். தற்போது ஒன்பதாவது லிருந்து பத்தாவது அரசு உயர்நிலைப் பள்ளி கொன்றைக்காட்டில் படித்து வருகிறார். நன்றாக படிக்கிறார் அனைத்து பாடத்திலும் தற்போது பள்ளியில் வைக்கும் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெற்று வருகிறார்





என்றார். இவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எங்களது குழந்தைகள் இந்த பள்ளியில் படிப்பதால் எங்களுக்கு ஒரு பைசா கூட செலவில்லை. அத்தோடு தனியார் பள்ளியை விட நல்ல படிப்பறிவையும் பொது அறிவையும் பெற்று வருகின்றனர் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இவ்வளவு புகழ்பெற்ற அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் வள்ளியின் பணி புரியும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகளுக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் பலவிதமான புகார்களை சிலர் கூறி வந்த நிலையில் இந்த புகார்கள் உண்மையா என நாம் ஆய்வு செய்தபோது இது பற்றி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரின் மகன் சாமியப்பன் என்பவர் கூறுகையில் இந்த பள்ளிக்கு போதிய இடம் இல்லை இதனால் மாணவர்கள் விளையாடுவதற்கு வாய்ப்பு இல்லை இதனால் அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக அதனை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ராமமூர்த்தி மீட்க முயன்றபோது ராமமூர்த்தி யை நீக்கவும் பள்ளி நிர்வாகத்தை சீர்குலைக்கவும் சிலர் முயற்சி செய்து அவதூறு பரப்பிவருகின்றனர். இந்த பள்ளியின் வளர்ச்சியினால் தனியார் பள்ளிகளின் சேர்க்கை குறைவதை கருத்தில் கொண்டு தனியார் பள்ளி நிர்வாகத்தினர் சிலரை தூண்டிவிட்டு பள்ளிக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் இடையூறு செய்து வருகிறார்கள் என்றார்.

பட்டுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடு:

கொசுத் தொல்லையால் பொதுமக்கள் அவதி.



அபராதம் விதிக்கும் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு பொதுமக்கள்கண்டனம்

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட முக்கிய அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் சுகாதாரச் சீர்கேடு அதிகரித்து வருவதுடன், கொசுத் தொல்லையும் கடுமையாக உயர்ந்துள்ளதாகப் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்

பட்டுக்கோட்டை நகராட்சி மருத்துவமனை, தாலுகா அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் (RDO) அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அரசு மையங்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் வந்து செல்லும் பல்வேறு பொது இடங்களில் தூய்மைப் பணிகள் சரியாக நடைபெறுவதில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அங்குக் குப்பைகளும் கழிவுகளும் முறையாக அகற்றப்படாமல் சுகாதாரமற்று காணப்படுவதால், கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாகி வருகின்றன

இதனால் அரசு அலுவலகங்களுக்கும் மருத்துவமனைக்கும் வரும் நோயாளிகள், பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் கடும் அசௌகரியத்திற்கு உள்ளாவதோடு, காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.







எனவே, பட்டுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, அரசு அலுவலக வளாகங்கள் மற்றும் பொது இடங்களைச் சீராகத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றும், கொசுமருந்து தெளித்து கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்

பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் நகராட்சி நிர்வாகத்தின் சீர்கேட்டை கண்டித்து வரும் சூழலில் பட்டுக்கோட்டை சுற்றியுள்ள பல இடங்களில் ஆய்வு மேற்கொண்ட நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரிகள் எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி குப்பைகளை முறையான முறையில் அல்லாமல் அந்தந்த கடைக்காரர்களுக்கு அபராதம் விதித்துள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ரோட்டில் ஓடும் கால்வாய்களை சுத்தமாக வைக்காமல் பல்வேறு பகுதிகளில் சேர்ந்துள்ள குப்பைகளை அகற்றாமல் பொதுமக்களுக்கு அபராதம் விதிக்கும் நகராட்சியின் நடவடிக்கைக்கு அனைத்து தரப்பு மக்களும் சமூக ஆர்வலர்களும் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்

நகராட்சி நிர்வாகம் சரியாக செயல்பட்டால் கொசுக்கள் உற்பத்தி குறைந்து பொதுமக்களுக்கு தேவையற்ற காய்ச்சல்கள் வருவதும் குறையும் வாய்ப்புள்ளது. எனவே நகராட்சி இதை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்

வாசகர்கள்
பத்திரிகை நண்பர்கள்
அரசு அதிகாரிகள்
மற்றும்
காவல்துறை
நண்பர்கள்
அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்



நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்
குழுமத்தினர் சார்பாக

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்
R.சிவக்குமார்



தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அதிகாரிகள் எங்கே?

பாதிக்கும் மக்கள்...

அரசு கவனிக்குமா!



செங்கல்பட்டு மாவட்டத்தில் வட்ட தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் இல்லாமல் மக்கள் அவதி. இதில் கவனத்திற்கு உரிய விஷயம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வீரப்பன். தலைமை சரியாக இருந்தால் தான் கீழ் இருக்கும் அரசு ஊழியர்கள் செயல்படுவார்கள். ஆனால் இங்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகமே முறையாக செயல்படவில்லை

மாவட்ட ஆட்சியர் அலைபேசி எண், மாவட்ட ஆட்சியரின் உதவியாளர் அலைபேசி எண், டிஆர்ஓ என அனைவரின் அலைபேசி எண்ணும் பயன்பாட்டில் இல்லை. இதனால் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இதை பலமுறை செய்திகள் மூலம் நமது நீதியின் நுண்ணறிவு மாத இதழ் சார்பில் தெரிவித்தோம். ஆனாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

அலட்சியம் காட்டும் மாவட்ட ஆட்சியர் வீரப்பன்

குறிப்பாக தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் இல்லாமல் 4 மாதங்களாக மக்கள் அவதிப்படுகின்றனர். தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 3 மாதத்தில் நான்கு வட்டாட்சியர்கள் மாற்றப்பட்டுள்ளனர். ஏன் இந்த அவல நிலை.?


வெங்கடேசன்
வட்ட துணை ஆய்வாளர்

தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டத் துணை ஆய்வாளர் வெங்கடேஷ் மற்றும் பிர்க்கா சர்வேயர் ஒன்பது நபர்கள், ஒரு நகர சார் ஆய்வாளர் என பத்து நபர்கள் வேலை செய்கின்றனர். உட்பிரிவு பட்டா மாறுதல் எஃப்.எம்.டி நிலம் சர்வே போன்ற வேலைகள் மட்டுமே முறையாக நடைபெற்று வருகிறது.

கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக இருந்த ராதா தற்போது வட்டாட்சியராக பணி அமர்த்தப்பட்டு இருக்கிறார். வட்டாட்சியர் அலுவலகத்தில் சர்வே துறை மட்டுமே முறையாக செயல்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் மாற்றங்கள் எதுவும் ஏற்படுகிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்



சென்னை மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.மாலதி ஹெலன், இ.ஆ.ப., அவர்கள் (03.11.2026) அன்று மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் மூலம் ரூ.1,0053,750 /- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது) st Paul's, Church, 62, Hunders Road Choolai, -112. தேவாலயத்தை புனரமைப்பதற்காக பாதிரியார் Rev.எஸ்.சாமுவேல் அவர்களிடம் வழங்கப்பட்டது. உடன், மாவட்ட சிறுபான்மையின நல அலுவலர் திருமதி மூ.சி. லதா உடனிருந்தனர்.



தென்காசி மாவட்டம், தென்காசி நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை மாவட்ட ஆட்சியர் மரு. மோனிகா ராணா, இ.ஆ.ப., அவர்கள் (03.11.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புனித தோமையர்மலை பகுதியில் உள்ள 2 விடுதிகளில்

ரூ.15 லட்சம் பணத்தை மோசடி செய்த பெண் கைது.

சென்னை, ஆலந்தூர், புதுப்பேட்டை தெருவில் வசித்து வரும் கீதா, பெ/வ-42, க/பெ.முருகதாஸ் என்பவர் ஆலந்தூர் பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என 2 விடுதி நடத்தி வருவதாகவும், இவரது மாமனாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், மேற்படி 2 விடுதிகளை நிர்வாகம் செய்வதற்காக, சுபதாரணி என்பவரை கடந்த 01.06.2025 அன்று முதல் வேலைக்கு அமர்த்தி, அவரிடம் மேற்படி 2 விடுதிகளின் பொறுப்புகளை ஒப்படைத்து, வாடகை பணம் வசூல் செய்யுமாறு கூறியதாகவும், இந்நிலையில் சுபதாரணி என்பவர் மேற்படி 2 விடுதிகளும் நஷ்டத்தில் இயங்குவதாகவும் விடுதியை மேம்படுத்துவதற்காக பணம் தேவைபடுவதாக கூறியதின்பேரில், கீதா அவரது தங்கநகைகளை அடகு வைத்தும், லோன் பெற்றும், ரூ.21 லட்சம் பணத்தை மேற்படி விடுதிகளின் மேம்பாட்டிற்காக செலவு செய்துள்ளதாகவும், இந்நிலையில் கீதா மேற்படி விடுதிகளில் கணக்கு வழக்குகளை சரிபார்த்தபோது, விடுதியின் வாடகை பணத்தை சுபதாரணி என்பவர் அவரது gpay மூலம் பெற்று, சுமார் ரூ.15 லட்சம் வரை மோசடி செய்துள்ளது தெரியவந்ததாகவும், இது குறித்து சுபதாரணியிடம் கேட்டபோது, அவரது தவறை



ஒப்புக்கொண்டு, மோசடி செய்த பணத்தை திருப்பி தருவதாக கூறியதாகவும், பின்னர் பல்வேறு காரணங்களை கூறி, பணத்தை தராமல் ஏமாற்றி வருவதாகவும், எனவே மேற்படி சுபதாரணியை விசாரணை செய்து, மோசடி செய்த பணம் ரூ.15 லட்சத்தை பெற்றுத் தருமாறு கீதா என்பவர் S-1 புனிததோமையர்மலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.


S-1 புனிததோமையர்மலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல்குழுவினர் தீவிர விசாரணை செய்து, புகார்தாரரின் விடுதிகளை நிர்வாகம் செய்வதாக கூறி, வேலைக்கு சேர்ந்து, வாடகை பணத்தை பெற்று மோசடி செய்த எதிரி சுபதாரணி, பெ/வ-28, மடுவாங்கரை, கிண்டி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சுபதாரணி விசாரணைக்குப் பின்னர் (02.11.2026) அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!



One Brand.
Multiple Solutions.

GEESYS®

POWER CONDITIONING

AC & Servo Voltage Stabilizers
Isolation Transformers
LT Distribution Panels
AMF & APFC Panel
Automation Panels
Motor/Pump Starter Panel
HT VCB Panel
Control & Potential Transformers
Fire Fighting Panels
Electrical Bus Ducts
Rasing Mains
Construction DB
Metering Cubicle

RESIDENTIAL PRODUCTS

Home UPS
Starter Panel
Voltage Stabilizers
EB Metering Panel
EB Metering Panels
Distribution Boards
Automatic EB-DG Changer
Automatic Phase Changers
Automatic Water Level Controller
Automatic Ph Sequence Corrector

EARTHING AND LIGHTNING

Copper Bonded Electrodes
GI Self Pressed Electrodes
LA Conventional - GI & Cu Bonded
Conductors - Al & Cu Strip and Cables
PVC Insulators - Conical, T & Flat type
Pit Chamber - FRP, Concrete & Metal

POWER GENERATION

Solar PCU
Solar DCDB
Solar ACDB
Solar BoS KIT
800 V LT Panel
Solar Junction Boxes
String Monitoring Box
Solar Combiner Boxes
Weather Monitoring System
Solar VFD Pump Controller
Solar Reverse Power Relay
Solar Array Junction Boxes

POWER BACKUP

Online UPS
Lift Inverters
Power Inverter
Industrial Battery Chargers
Electrical Vehicle Chargers



SAFETY FIRST
RELIABLE PERFORMANCE
ENERGY EFFICIENCY
100% CUSTOMER SATISFACTION

Book Free Consultation Today

9962012354

Info@geesysindia.com
www.geesysindia.com